இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 24.01.2026

# முடியவில்லை மொழிப்போர்..

**‘இந்தி எதிர்ப்புப் போர் என்பது மொழிப்போர் மட்டுமல்ல, இது இன உரிமைப் போர்” என்றார் தலைவர் கலைஞர்!**

**தமிழ் காக்க, தமிழினம் காக்க நடைபெற்று வருவதுதான் மொழிப் போராட்டம் ஆகும். முதலாவது மொழிப்போர் என்று 1938 ஆம் ஆண்டு சொல்லப்பட்டாலும் அதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே, இந்தி ஆதிக்கத்தை, மொழித் திணிப்பை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் அவர்கள்.**

**தமிழ்நாட்டில் இந்திப் பிரச்சார சபா தொடங்கப்பட்ட காலத்தில் அதற்கான நிதி திரட்டல் செய்யப்பட்டபோது, தமிழர்கள் யாரும் நிதித் தரக் கூடாது என்று சொன்னவர் பெரியார். பல்வேறு மாநாடுகளில் தீர்மானம் போட்டார் பெரியார். தனது ‘குடிஅரசு’ இதழில் தொடர்ந்து எழுதினார் பெரியார். இவை எல்லாம் 1938 போராட்டத்துக்கு முந்தைய பத்தாண்டுகள் ஆகும்.**

1938 ஆம் ஆண்டு அரசின் சார்பில் பள்ளிகளில் இந்தி கட்டாயம் ஆக்கப்பட்ட போதுதான் அது மிகப்பெரிய போராட்டம் ஆனது. இதில் அரசியல் இயக்கங்களைவிட தமிழ் இயக்கங்கள், தமிழறிஞர்கள் அதிகம் பங்கேற்க வேண்டும் என்று தூண்டினார் பெரியார். அதனால் விழிப்புணர்வு பெற்று தமிழறிஞர்கள் அப்போராட்டத்தில் பங்கெடுத்தார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் குடும்பம் குடும்பமாகச் சிறை சென்றார்கள். பெரியார் கைது செய்து செய்யப்பட்டு ஒன்பது மாதங்கள் சிறை வைக்கப்பட்டார். பேரறிஞர் அண்ணா கைது செய்யப்பட்டார்.

1938 - இந்தி எதிர்ப்புப் போர் தமிழகத்தில் தொடங்கிய நேரத்தில் கலைஞருக்கு வயது 14. நாள்தோறும் மாணவர்களைக் கூட்டிக் கையில் தமிழ்க் கொடியுடன் இந்தி எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பி, கட்டாய இந்தியை எதிர்த்து மாணவர் பேரணியை நடத்தினார். இத்தகைய போராட்டத்தால் இந்தித் திணிப்பு அப்போது கைவிடப்பட்டது.

மீண்டும் 1948 ஆம் ஆண்டு இந்தி திணிக்கப்பட்டது. பெரியாரும், அண்ணாவும் தலைமைவகித்து மொழிப் போராட்டம் நடத்தினார்கள். பின்வாங்கியது இந்தி. இருந்தாலும் ஆண்டுதோறும் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தை நடத்தியது திராவிட இயக்கம். 1950 ஆம் ஆண்டு முதல் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தி எழுத்துகளை அழிக்கத் தொடங்கியது. அதன் பிறகு தான் புகைவண்டி நிலையங்களிலும், அஞ்சல் நிலையங்களிலும் தமிழில் எழுதியது ஒன்றிய அரசு.

1963 - இந்தித் திணிப்பைக் கண்டித்து போராட்டக் களம் அமைக்கப்பட்டது. கலைஞர் தலைமையில் போராட்டக் குழு அமைக்கப்பட்டது. ‘நான் பெற்றுக் கொண்டிருக்கிற இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவேன். பணியாற்றுவேன். பலியாகவும் தயாராக இருக்கிறேன்’ என்றார் கலைஞர். மதுரையில் சட்டத்தை எரித்து கலைஞர் கைதானார். கலைஞருக்கு தேனியில் அண்ணா அவர்கள் வீரவாள் பரிசளித்துப் பாராட்டினார். அந்த மூன்றாண்டு காலமும் மொழிப்போரால் கனன்றது தமிழ்நாடு. அதுவரை போராட்டமாக இருந்தது, 1965 ஆம் ஆண்டு போராக மாறியது. கழகத்தோடு இணைந்து மாணவர்கள் நடத்திய போர் அது. அடுத்து அமைந்த கழக அரசு இருமொழிக் கொள்கையைச் சட்டமாக்கும் சூழலை அரசியல் வெற்றி ஏற்படுத்திக் கொடுத்தது.

**1970 திருச்சி மாநாட்டில் ஐம்பெரும் முழக்கத்தை அறிவித்த தலைவர் கலைஞர், ‘இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்’ என்பதையும் ஒரு முழக்கமாக இணைத்தார். அடுத்த ஆண்டு கோவையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் உரையாற்றிய இன்றைய தலைவர் - அன்றைய மாணவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘தமிழுக்காக உயிர் தரத் தயார், அந்தப் பட்டியலில் என்னை இணைத்துக் கொள்ளுங்கள்’ என்று முழங்கினார்.**

**“இந்தி எதிர்ப்பு என்பது செத்த குதிரை” என்று 1978 ஆம் ஆண்டு பிரதமர் மொரார்ஜி சொன்னபோது, “அது செத்த குதிரையல்ல, தூங்கும் குதிரை” என்றார் கலைஞர். தூங்கும் குதிரையைத் தட்டி எழுப்பினார் கலைஞர்.**

1986 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல்வாரத்தை இந்தி வாரமாகக் கொண்டாட அன்றைய அரசு அறிவிப்பு செய்த போது, ‘தேவநாகரி வரி வடிவத்தில் உள்ள இந்தி இந்தியாவின் அதிகாரப்பூர்வ மொழியாக இருக்க வேண்டும்’ என்று எழுதி அதனைக் கொளுத்த உத்தரவிட்டார் தலைவர் கலைஞர்.

1993 ஆம் ஆண்டு தொலைக்காட்சிகளில் இந்தி நிகழ்ச்சிகள் அதிகரிக்கப்பட்டபோது, அதனை எதிர்த்து சென்னை தொலைக்காட்சி நிலையம் முன்பு இளைஞரணிச் செயலாளர் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. தொலைக்காட்சிப் பெட்டிகள் உடைக்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டு என்.சி.இ.ஆர்.டி. வெளியிட்ட பாடப்புத்தகத்தில் 1965 மொழிப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் கருத்துப்படம் இடம்பெற்றிருந்தது. அதனை தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. அதன்பிறகு அந்த கருத்துப்படம் நீக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு இந்திக்கு ஆதரவாக உள்துறை அமைச்சர் அமித்ஷா கருத்துக் கூறிய போது, ‘மீண்டும் 1965 கிளம்பும்’ என்று தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். ‘அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை’ என்று உள்துறை அமைச்சர் விளக்கம் அளித்தார்.

இப்போதும் மும்மொழித் திட்டத்தை புதிய தேசியக் கல்விக் கொள்கை மூலமாக புகுத்துகிறார்கள். அதனை ஏற்க மறுத்துவிட்டார் முதலமைச்சர் அவர்கள். இதனால் நிதி ஒதுக்கீடு இல்லாமல் போனாலும் மொழித் திணிப்பை ஏற்காமல் போராடி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

**எதிர்க்கட்சியாக இருந்த போது மட்டுமல்ல, ஆளும் கட்சியாக இருக்கும் போதும் போராடிக் கொண்டு தான் இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். ஜனவரி 25 அன்று தமிழ்நாடு முழுவதும் கழக முன்னணியினர் முழங்க இருக்கிறார்கள்.**

**“இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களில் ஒன்றானதும் - திராவிடக் கலாச்சாரப் பின்னணி கொண்டதுமான தமிழ்த் தேசியத்தை வளர்த்துக் காத்திடவும் - தமிழ் மொழிக்குப் பிறமொழியால் ஆபத்து அணுவளவும் நேராமல் தடுக்கவும் பொறுப்பேற்றுப் பணியாற்றுவர்களாக நாமாகத் தான் இருக்கிறோம் - (22.4.1977) என்று சொன்னார் கலைஞர். அத்தகைய பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார் இன்றைய தலைவர்.**

“மொழியும் இனமும் கழகத்தின் இரு கண்கள்” என்ற தலைவரின் முழக்கம் கோடிக்கணக்கான தமிழர்களின் உணர்வு ஆகட்டும்.

**முடியவில்லை மொழிப்போர்!**

**செந்தமிழைக் காக்க சேனை ஒன்று தேவை!**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (23.1.2026) சென்னை அண்ணா அறிவாலயத்தில், அ.ம.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கடம்பூர் எஸ்.வி.எஸ்.பி.மாணிக்கராஜா, தென்காசி மாவட்டச் செயலாளர் ஆர்.ராமச்சந்திரமூர்த்தி (எ) வினோத், கன்னியாகுமரி மத்திய மாவட்டச் செயலாளர் வி.ரத்தினராஜ், மேற்கு மாவட்டச் செயலாளர் ஏ.ஸ்டெல்லஸ் மற்றும் நிருவாகிகள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலைய அலுவலக செயலாளர் பூச்சி எஸ். முருகன் மற்றும் கழக நிருவாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.01.2026) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் தொழில் பூங்கா மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு முள்ளக்காடு கிராமத்தில், 2292.38 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் திட்டப்பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் திருமதி பி.கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், டி.ஆர்.பி.ராஜா, கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வி.அருண் ராய், சிப்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் கி.செந்தில்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடந்த தேர்தல்களின் போது

# அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு அடுக்கடுக்காக பட்டியலிட்டார்!

*சென்னை, ஜன. 24-*

சட்டப் பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் தங்கமணி தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று கூறியபோது பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை அடுக்கடுக்காக பட்டியலிட்டார்.

சட்டப் பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் பி. தங்கமணி பேசும் போது குறுக்கிட்டு அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். தேர்தல் காலங்களிலே இவைகளெல்லாம் நாங்கள் செய்வோம் என்று எல்லா அரசியல் கட்சிகளும் வாக்குறுதிகளைக் கொடுப்பது உண்டு. ஆளுங்கட்சியில் இருப்பவர்களுக்கு அதை நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமை இருக்கிறது. தேர்தல் அறிக்கை எழுதுகிற போது, ஆட்சியில் இல்லாதபோது சில நேரங்களில் எழுதுவோம். ஆட்சிக்கு வந்தவுடன் பார்த்தால் நிதி நிலைமைக்கு ஏற்றாற் போல்தான் ஒவ்வொன்றையும் செய்ய முடியும்.

இந்த ஆட்சியைப் பொறுத்தளவிற்கு மக்களுடைய முக்கியமான பிரச்சினைகள் என்னவோ அவைகளெல்லாம் ஏறத்தாழ 90 சதவிகிதம் சரி செய்து இருக்கிறோம். சொல்லாத வாக்குறுதிகளையும் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அவருக்கு பாராட்ட மனமில்லை. பரவாயில்லை. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் இருக்கும்போதே தேர்தல் அறிக்கையை அளித்தீர்கள். 58 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் என்று சொன்னீர்கள். அனைவருக்கும் கொடுத்துவிட்டீர்களா இல்லை. சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவையில் மோனோ இரயில் திட்டம். நான் அப்போது எதிர்க்கட்சியில் இருந்தேன். அந்தத் திட்டத்தை அறிவிக்கின்ற போது அவ்வளவு கைத் தட்டல்கள். மேசையே உடைந்துவிடும் என்று நான் யோசித்தேன். அந்த அளவிற்கு கை தட்டினீர்கள். ஆனால், அந்தத் திட்டம் நடக்கவில்லை. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய தலைமையகங்களிலே முதியோர் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு தனியாக ஒரு காப்பகம் அமைக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் கூறினீர்கள். அந்தத் திட்டமும் கொண்டு வரப்படவில்லை. அதோடு மட்டுமல்ல; தமிழ்நாட்டில் வீடு இல்லாத அனைவருக்கும் 3 சென்ட் இடம் கொடுக்கிறோம் என்று கூறினீர்கள் அதனை நிறைவேற்றினீர்களா?

ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கெல்லாம் இலவசமாக செல்போன் வழங்கப்படும் என்று சொன்னீர்கள் அதனை கொடுத்துவிட்டீர்களா? ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கெல்லாம் பொங்கல் பண்டிகைக்காக Cooptexல் எடுத்தால் 500 ரூபாய் மதிப்புள்ள coupon வழங்குகிறோம் என்று சொன்னீர்கள். நானும் எதிர்க் கட்சியாக இருக்கும் போது வரும் வரும் என்று பார்த்தேன் அந்த couponம் வரவில்லை. அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை ஏனென்றால், 2003 ஆம் ஆண்டு அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதிய திட்டத்தை நிறுத்தியது அப்பொழுது முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள். அவர்களை நான் விமர்சனம் செய்யவில்லை. ஆண்டிற்காக சொல்கிறேன். அப்பொழுது நாங்கள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தோம். பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வருவோம் என்று சொன்



னீர்கள். ஆனால், கடைசி வரை நீங்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வரவில்லை. அம்பேத்கர் அறக்கட்டளை நிறுவப்படும் என்று சொன்னீர்கள். அதிலும் ஒன்றும் நடக்கவில்லை. அம்மா வங்கி அட்டை வழங்குகின்ற திட்டம் வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் நீங்கள்தான் கூறினீர்கள். தேர்தல் அறிக்கை புத்தகம் இரண்டு வைத்திருக்கிறேன்.

மீனம்பாக்கம்-செங்கல்பட்டு இடையே உயர் மட்ட நெடுஞ்சாலை மேம்பாலம், இந்தத் துறையின் சார்பாக, இப்போது நான் வகிக்கிற பதவி. ஆனால், நீங்கள் கட்டுவீர்கள் என்று பார்த்தோம். கடைசி வரையில் நீங்கள் கட்டவில்லை. இலங்கையில் இருந்து வந்த தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்படும் என்று நீங்கள் சொன்னீர்கள், அதுவும் நடக்கவில்லை. கட்டணமில்லா இலவச 2G இணைய வசதி மாணவர்களுக்கெல்லாம் தந்துவிடுவோம் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. முல்லைப் பெரியாறு அணை நீர்த்தேக்கத்தை 152 அடி உயர்த்துவோம் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. அரசு ஊழியர்களுக்கு கட்டடம் கட்ட முன்பணம் 40 இலட்சம் ரூபாய் வரை வழங்குவோம் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்போம் என்று ரொம்ப அழுத்தமாகச் சொல்லி இருந்தீர்கள், நடக்கவில்லை. தமிழகத்தில் ஓடும் ஆறுகளை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை.

வீட்டில் இருப்பவர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் அரசு வேலை தருவோம், வீட்டில் இருப்பவர்களுக்கெல்லாம் ஒவ்வொருவருக்கும் அரசு வேலை தரப்படும் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. வேலைக்குச் செல்லும் மகளிருக்கு scooter வாங்குவதற்காக 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும், மகளிர் யாரெல்லாம் scooter கேட்கிறீர்களோ அவர்களுக்கெல்லாம் 50 சதவிகிதம் வழங்கப்படும் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. சிறு, குறு, பெரிய திரைப் படங்களுக்கு, ஏனென்றால், நான் distributor ஆக இருந்தேன், திரைப்படத் தயாரிப்பாளராக இருந்தேன். பல தயாரிப்பாளர்கள் என்னிடம் சொன்னார்கள்.

இதுமாதிரி 100 கோடி ரூபாயில் கடன் பெறுவதற்கு வசதியாக புதிய ஆணையம் வைக்கப் போகிறார்களாம் என்று பல நண்பர்கள் என்னிடம் கேட்டார்கள், ஒன்றும் நடக்கவில்லை. அதோடு மட்டுமல்ல, 80 கோடியில் தென் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு-யார்? பேசுகிற சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய அருமை நண்பர், முன்னாள் அமைச்சர் தங்கமணி பகுதியைச் சார்ந்திருக்கிற விவசாயிகளாக இருக்கிற அந்த தென்னை விவசாயிகளுக்கு 800 கோடி ரூபாயில் தென்னங்கன்று நடவுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை கொண்டு வரப் போகிறோம் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. அதைவிட கல்லூரியிலே படிக்கிற மாணவர்கள் வாங்கி இருக்கிற வங்கிக் கடனை இந்த அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளும் என்று சொன்னீர்கள், அதுவும் நடக்கவில்லை. ஆக இவ்வளவும், தேர்தல் அறிக்கையில் வாசித்து ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், இந்த ஆட்சியில் ஏறத்தாழ 90 சதவிகித பணிகள் நிறைவு பெற்றதோடு மட்டுமல்ல, சொல்லாததை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செய்திருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். பாராட்ட உங்களுக்கு நல்ல மனது இல்லை. தங்கமணி அவர்கள் நல்ல சட்டமன்ற உறுப்பினர், நல்ல முன்னாள் அமைச்சர், பாராட்டுவார் என்று பார்த்தேன்; ஒன்றும் நடக்கவில்லை.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற திராவிடப் பொங்கல் 2026 விளையாட்டுப் போட்டிகளில் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. சு.கல்யாணசுந்தரம் எம்.பி., ஆகியோர் பதக்கங்கள், ஊக்கத்தோகை மற்றும் கோப்பைகள் வழங்கி வாழ்த்தினர். இவ்விழாவில் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், கழக நிர்வாகிகள் மாவட்ட அவைத்தலைவர் நசீர் முகமது, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துசெல்வம், ஜெ.சுதாகர், சரவணன், உள்ளிட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உள்ளனர்.